IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | Spl.S.C. 17/2024 |
| | Prosecution |
| Deposition of witness for | LW 1, PW2 |
| Name | **சுஸ்மாகுமாரி.** |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 7th day of July 2025.

07.07.2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சிக்கு தமிழ் மொழி தெரியாத காரணத்தினால் இந்த நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளர் திரு. சிவக்குமார் மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டு, சாட்சிக்கு தமிழில் கேள்விகள் கேட்க்கப்பட்டு அதை மொழிபெயர்ப்பாளர் இந்தி மொழியில் மொழிபெயர்ப்பு செய்து சாட்சியிடம் தெரிவித்து சாட்சி சொன்ன பதிலை தமிழில் பதிவு செய்யப்படுகிறது.**

**சத்தியமாக சொல்கிறேன்.**

**முதல் விசாரணை:-**

நான் தற்சமயம் பழனியப்பா எஸ்டேடில் விவசாய தொழிலாளியாக பணி செய்கிறேன். எனது கணவர் சுல்தான எஸ்டேட்டில் பணி செய்கிறார். எனக்கு செந்த ஊர் ஜார்கண்ட் மாநிலம், விஸ்னூபூர் என்ற இடமாகும். எனக்கு 3 பெண் குழந்தைகள். இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமி எனது மூத்த மகள் ஆவார். என் மூத்த மகளுக்கு 9 வயதாகிறது, அவள் தான் பாதிக்கப்பட்ட சிறுமி ஆவார். இந்த வழக்கின் போது என் மகள் 3 ஆம் வகுப்பு பழனியப்பா எஸ்டேட் பள்ளியில் படித்து வந்தார். எதிரி ஜெய் சங்கர் என்பவரை எனக்கு தெரியும், அவர் நான் பணிபுரியும் எஸ்டேட்டில் தான் பணி செய்கிறோர். கடந்த 07.03.2024 ஆம் தேதி இரவு 8.00 மணிக்கு எதிரி ஜெய்சங்கர் நாங்கள் யாரும் இல்லாத போது எங்கள் வீட்டிற்கு வந்து எனது மூத்த பெண் குழந்தையை அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்றுள்ளார். அச்சமயத்தில் நான் எனது 3 வது குழந்தையை சாப்பிடி வைத்து உறங்க வைத்து கொண்டிருந்தேன். நீண்ட நேரம் ஆகிவிட்டபடியால் பாதிக்கப்பட்ட சிறுமியை காணவில்லை என்று நான் தேடினேன். நான் என் மகளை பெயர் சொல்லி சத்தம் போட்டு கூப்பிட்டேன். பின்னர், என் குழந்தையை தேடி சென்ற போது ஜெய்சங்கர் வீட்டிற்கு சென்றேன். அப்போது அவரது வீட்டில் யாரும் இல்லை. அப்போது நான் அவர் வீட்டில் இருந்து வெளியில் வந்துகொண்டிருந்த போது அவர் வீட்டில் இருந்த கழிப்பறையில் கொலுசு சத்தம் பேட்டது. அப்போது அந்த கழிப்பறையில் இருந்து எதிரி மற்றும் என் பெண் குழந்தை வெளியில் வந்தனர். நான் என் மகளை அழைத்து கொண்டு என் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் பார்த்த போது என் மகள் ப்ராக் உடை அணிந்திருந்தர். என் மகள் உடை அணிந்திருந்தாள். என் மகளை என்ன

நடந்தது என என் வீட்டில் வைத்து கேட்ட போது அவள் எதுவும் சொல்ல மறுத்துவிட்டால். பின்பு என் கணவர் வந்து அடித்து கேட்ட போது நடந்தவற்றை கூறினார். அப்போது எதிரியானவர் என் மகளை அழைத்து கொண்டு, அவருடைய படுக்கை அறைக்கு சென்று, என் மகளின் ஆடைகளை கழட்டி தப்பு செய்துள்ளார். இதை பற்றி யாரிடமும் கூறக்கூடாது என மிரட்டி உள்ளார். இது சம்பந்தமாக நாங்கள் எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்டோம் . அப்போது எதிரி அவருடைய தாயார் மற்றும் அவருடைய சகோதரி அங்கிருந்தர்கள். அப்போது ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்டோம். அப்போது, எதிரியின் தாயார் மற்றும் சகோதரி எதிரியை பார்த்து ஏன் இப்படி நடந்து கொண்டதாக கேட்டார்கள். நாங்கள் வெளி மாநிலத்தை சேர்ந்தவர்கள் என்பதால் உடனடியாக என்ன செய்வது என்று எங்களுக்கு தெரியவில்லை. பின்னர் 9 ஆம் தேதி எங்கள் எஸ்டேட்டை சேர்ந்தவர்களுக்கு விவரம் தெரிந்து, உன் குழந்தைக்கு நடந்தது போல் மற்ற குழந்தைகளுக்கு நடக்காதா என கேட்டு உடனடியாக புகார் கொடுக்க சொன்னார்கள். அதனால், நான் 09 ஆம் தேதி குன்னூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று ஒரு புகார் கொடுத்தேன். நான் சொன்னவற்றை புகாராக எஸ்டேட்டில் உள்ள ராஜ்குமார் என்பவர் எழுதினார். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் (அதசாஆ 2) ஆகும். இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் வினோத் குமார் எதிர் பஞ்சாப் அரசு முன் தீர்ப்பின்படி எதிரி தரப்பு குறுக்கு விசாரணை வாய்ப்பு முடித்து வைக்கப்படுகிறது.

Sd/- சுஸ்மாகுமாரி/

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. M.Senthilkumar/
Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.